DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.111/2023**
Deposition of Witness for – Prosecution : DW2
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஸ்ரீவிக்னேஷ் | | : |
| த/பெ | : வரதராஜ் | மதம் | : |
| கிராமம் | : நெற்குன்றம் | தொழில் | : Deputy Manager |
| வட்டம் | : சென்னை | வயது | : 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 15.07.2026**

**<u>முதல் விசாரணை:</u> DW2**

நான் SBI வங்கி, நெற்குன்றம் கிளையில் கடந்த 1 மாத காலமாக துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறனே். நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த அழைப்பாணையின் பேரில் சாட்சியளிக்க வந்துள்ளேன். புகார்தாரர் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அதன் Account opening form **(எ.ம.சா.ஆ.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார்தாரர் மகேந்திரனின் வங்கி கணக்கின் 03.08.2020 முதல் 30.12.2023 வரையிலான Statement of Accounts **(எ.ம.சா.ஆ.7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.ஆ.7 ஆவணத்தில் 05.03.2021 ரூ.4,000/–, 05.04.2021 ரூ.4,000/–, 05.05.2021 ரூ.1,000/–, 04.06.2021 ரூ.7,500/–, 21.06.2021 ரூ.5,500/– மொத்தம் ரூ.22,000/– சுப்ரமணி வங்கி கணக்கில் இருந்து புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. 05.07.2021 ரூ.3,000/–, 22.07.2021 ரூ.3,000/–, 21.08.2021 ரூ.4,500/–, 21.09.2021 ரூ.4,500/–, 05.10.2021 ரூ.3,000/–, 05.11.2021 ரூ.3,000/–, 22.11.2021 ரூ.4,500/–, 06.12.2021 ரூ.3,000/– மொத்தம் ரூ.28,500/– சுப்ரமணியின் மகன் ரோகித் வங்கி கணக்கில் இருந்து புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு வரவு

வைக்கப்பட்டுள்ளது. 01.08.2021 ரூ.1500/-, 05.08.2021 ரூ.3,000/-, 21.01.2022 ரூ.4,500/- மொத்தம் ரூ.9,000/- சுப்ரமணியின் மகன் ரஞ்சித் வங்கி கணக்கில் இருந்து புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் வங்கி கணக்கிற்கு எதிரியும் அவரது மகன்களும் எதற்காக பணம் அனுப்பினார்கள் என்ற காரணம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். எதிரி மற்றும் அவரின் இரு மகன்கள் ஒவ்வொரு முறையும் செய்யப்பட்ட பரிவர்த்தனையானது ரூ.7,500/- ற்கு கீழ் உள்ள தொகை என்றால் சரிதான். புகார்தாரர் கணக்கிற்கு பணம் அனுப்பிய எதிரி மற்றும் அவரது இரண்டு மகன்களை விசாரித்தால் தான் காரணம் குறித்து தெரிய வரும் என்றால் சரிதான்.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K